**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 75 of 2022

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | : தங்கமணி |
| Father's Name | : க/பெ. செந்தில்குமார் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of April 2023.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பாரதிபுரத்தில் வசித்து இல்லத்தரசியாக உள்ளேன்.

2. 05.01.2020ம் தேதியன்று மாலை 5 லிருந்து 6 மணிக்குள்ளாக விக்னேஷ் என்பவர் என்னுடைய கணவர் செந்தில்குமாரை வாடகைக்கு வண்டி வேண்டும் என்று அழைத்துள்ளார். அதனால் என்னுடைய கணவர் நடுப்பாளையம் பிரிவு எ 1 ரெஸ்டாரண்ட் அருகே உள்ள அம்மன் பேக்கரியில் தேநீர் அருந்தி கொண்டிருந்தபோது என்னுடைய கணவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்ன நிற உடை அணிந்திருக்கிறீர்கள் என்று கேட்டுக்கிறார்கள்.

3. வெள்ளை நிற ஸ்கார்பியோ காரின் என் கணவரை கடத்தி சென்றிருக்கிறார்கள். கடத்தி சென்ற அவரை மாலை 5 லிருந்து 6 மணிக்குள்ளாக அடித்து விட்டு அதன் பின்னர் அவரை பல்லபாளையம் பஞ்சாயத்து அலுவலத்திற்கு அருகே அவரை இறக்கி கீழே தள்ளி விட்டு வெளியில் கூறினாலோ காவல் நிலையத்தில் புகார் அளித்தாலோ எறித்து விடுவேன் என்று கூறி கெட்டவாத்தையால் திட்டியிருக்கிறார்கள்.

4. அதன்பின்னர் என்னுடைய கணவர் அவருடைய நண்பர் சதீஸ்குமாருக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் கொடுத்து பின்னர் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். அதன் பின்னர் எனக்கு தகவல் கொடுத்தார்கள். அதனால் நான் மருத்துவமனைக்கு சென்றேன். அதன்பின்னர் என்னுடைய கணவர் அனைத்து விபரங்களையும் என்னிடம் கூறினார்.

5. கடந்த 01.01.2020 ம் தேதியன்று காலை 9 மணியளவில் என்னுடைய கணவர் அவருடைய டெம்போவை பாரதிபுரத்தில் உள்ள ஸ்டாண்டில் நிறுத்தி வைத்திருந்ததாகவும் அப்பொழுது தாமரைகண்ணன் வெள்ளை நிற ஸ்கார்பியோ காரினை பின்பக்கமாக எடுத்த போது என்னுடைய கணவரின் வாகனத்தின் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டதாகவும் அதனால் என்னுடைய கணவர் அவருடைய வாகனத்தில் இருந்து இறங்கி சென்று இடித்து விட்டு ஏன் எதுவும் சொல்லாமல் செல்கிறீர்கள் என்று கேட்டதற்கு நாங்கள் யார் என்று தெரியுமா என்றும் முக்குலோத்தோர் புலிபடை என்று கூறிவிட்டு எங்களை எதுவும் செய்யமுடியாது என்று கூறிவிட்டு வாகனத்தை எடுத்து செல்லுமாறு கூறினார்.

6. மேற்படி சம்பவத்தை மனதில் வைத்து கொண்டு தான் 5 ம் தேதியன்று என் கணவரை கடத்தி சென்று அடித்ததாக கூறினார். என் கணவருக்கு கண் புருவம், தலை, பின்னங்கழுத்து, இடது மேற்புறகை மற்றும் கால் முட்டியில் காயம் இருந்தது. 2 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்துவிட்டு 7 ம் தேதியன்று காவல் நிலையத்தில் புகார் அளித்தோம்.

7. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புகாரானது நான் அளித்து ஆகும். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. 10 ம் தேதியன்று என்னுடைய கணவர் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

**1.** நான் பிகாம் படித்துள்ளேன். 5 ம் தேதி நடைபெற்ற சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னர் 2 நாட்கள் கழித்து

புகார் அளித்தேன் என்றால் சரிதான். 7ம் தேதிவரை போலீசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் 6ம் தேதியன்று போலீசார் ஒரு முறை விசாரித்தார்கள். என்னையும் என் கணவரையும் போலீசார் விசாரித்தார்கள்.

2. புகாரில் 6ம் தேதியன்று போலீசார் எங்களை விசாரித்தது குறித்து நான் குறிப்பிடவில்லை. எந்த கெட்டவார்த்தையால் திட்டினார்கள் என்று என்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ளேன். யார் திட்டினார்கள் என்று புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் புகாரில் குறிப்பிடவில்லை. ஆனால் விக்னேஷ் திட்டியதாக என் கணவர் கூறினார்.

3. 6ம் தேதியன்று போலீசார் எங்களை விசாரித்தபோது விக்னேஷ் திட்டியதாக போலீசாரிடம் தெரிவித்தோம். 6ம் தேதி விசாரித்தபோது நாங்கள் எத்தனை கையொப்பம் செய்தோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கும் என் கணவருக்கும் இடையே நல்ல பேச்சு வார்த்தை உள்ளது. எது நடந்தாலும் கணவர் என்னிடம் கூறுவார் என்றால் ஒரு சில விபரத்தை என்னிடம் கூறுவார். சிலவற்றை கூறமாட்டார்.

4. 1ம் தேதியன்று கார் மோதிய விபரத்தை என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை. என்னுடைய கணவரின் வாகனத்தில் என்ன சேதாரம் ஏற்பட்டது என்றாலும் எங்கு சரிசெய்தவற்கு விட்டோம் என்றால் எங்களுடைய வாகனத்தின் முனபக்க வலது புரத்தில் சேதாரம் ஏற்பட்டிருந்தது. மறு மாதம் எப்சிக்கு செல்லவேண்டியிருந்ததால் எங்களடைய வாகனத்தை பழுது பார்ப்பதற்கு அனுப்பவில்லை. மேற்படி சேதாரம் குறித்து புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

5. 1ம் தேதி நடைபெற்றதாக கூறப்படும் சம்பவம் குறித்து என்னுடைய கணவர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. போலீஸ் விசாரணையில் எங்கள் வாகனத்திற்கு ஏற்பட்ட சேதாரத்தை காண்பித்தோமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சம்பவத்திற்கு முன்னர் எனக்கு மற்றும் என்னுடைய கணவருக்கும் எதிரிகள் யாரையும் தெரியாது. வழக்கு சம்பவத்திற்கு பின்னர் தான் எதிரிகள் யார் என்றும் அவர்களுடைய பெயர்கள் குறித்தும் தெரிந்து கொண்டோம்.

6. புகாரில் யார் மூலமாக எதிரிகளுடைய பெயர் தெரிய வந்தது என்று குறிப்பிட்டு கூறினேனா என்றால் கூறவில்லை. எதிரிகள் பெயரை என்னுடைய மகன் பிரசாந்த்தின் மூலமாக நானும் என்னுடைய கணவரும் தெரிந்துகொண்டோம். போலீஸ் விசாரணை செய்யும் போது எங்களுடைய மகன் எங்களுடன் தான் இருந்தார். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபொழுதும் எங்களுடைய மகன் எங்களுடன் தான் இருந்தார்.

7. என்னுடைய கணவர் என்னை சம்பவ தினத்தன்று இரவு 8 மணிக்கு தொலைபேசியின் வாயிலாக தொடர்பு கொண்டார். என்னுடைய கணவரை பஞ்சாயத்து

அலுவலத்தின் அருகே எத்தனை மணிக்கு இறக்கி விட்டார்கள் என்று கணவர் என்னிடம் கூறவில்லை. சம்பவ சமயத்தில் என் கணவருடன் யார் யார் இருந்தார்கள் என்று என் கணவர் என்னிடம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. முருகானந்தம் என்பவர் உடன் இருந்தார் என்று கூறினார்.

8. முருகானந்தம் என் கணவருடன் இருந்தது குறித்து புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. 6ம் தேதியன்று போலீசார் எங்களை விசாரித்தபோது முருகானந்தம் என் கணவருடன் இருந்தது குறித்து நான் போலீசாரிடம் கூறவில்லை. என் கணவர் கூறினாரோ என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் கணவரை போலீசார் விசாரித்தபோது நான் அவருடன் தான் இருந்தேன்.

9. அம்மன் பேக்கரியானது பொதுமக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி என்றால் அப்பேக்கரியானது சற்று உள் தள்ளி இருப்பதால் நிறைய பேர் இருக்கமாட்டார்கள். எத்தனை பேர் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியும். அம்மன் பேக்கரிக்கு நான் சென்றதில்லை. ஆனால் அந்த வழியாக சென்றுள்ளேன். என்னுடைய கணவரை மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

10. புகார் மற்றும் போலீஸ் விசாரணையின் போது கணவரை எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்று அப்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. சாட்சியம் அளிப்பதற்கு முன்னர் நான் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தை படித்து பார்த்தேன். எனக்கு ஞாபகம் மறதி வியாதி எதுவும் இல்லை. 2 நாட்கள் என்னுடைய கணவர் சிகிச்சையில் இருந்தபோது பேசக்கூடிய நிலமையில் இருந்தாரா என்றால் தெளிவாக பேசக்கூடிய நிலையில் இல்லை.

11. சரியாக பேசமுடியாமல் என் கணவர் இருந்தது குறித்து புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. எந்தெந்த எதிரி என்னென்ன செய்தார்கள் என்று என் கணவர் கூறினாரா என்றால் கூறினார். பெயர்களை குறிப்பிட்டு அவர்களுடைய செயலை கூறினார். சம்பவத்திற்கு மறுநாள் காலையில் எதிரிகள் யாரையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு மறுநாள் பேஸ்புக்கிலிருந்து எதிரிகளின் புகைப்படத்தை தன் மகன் எடுத்து வந்து காண்பித்தார். நான் பேஸ்புக் பயன்படுத்துவது கிடையாது.

12. பேஸ்புக்கின் மூலமாக எதிரிகளின் பெயரை தெரிந்துகொண்டது குறித்து என்னுடைய புகார் மற்றும் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. எதிரிகள் என்ன வேலை பார்க்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. என்னுடைய மகனை இவ்வழக்கில் சாட்சியாக

சேர்க்கவில்லை. என்னுடைய மகன் எதிரிகள் குறித்த விபரத்தை சேகரித்தது குறித்து போலீஸ் விசாரணையில் குறிப்பிடவில்லை. போலீசார் என்னை ஒரே ஒரு முறை 6 ம் தேதி மட்டும் தான் விசாரித்தார்கள்.

13. போலீசார் எங்களை விசாரித்த பின்னர் மறுநாள் காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளிக்குமாறு கூறியதன் பெயரில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி விபரங்களை என்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. 6 ம் தேதி போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனைக்கு 9 மணியளவில் சென்றிருப்பேன். தன்னை யார் அடித்ததாக என் கணவர் மருத்துவரிடன் கூறினார் என்றால் அடையாளம் தெரியாத நபர்கள் அடித்ததாக கூறினார்.

14. மருத்துவமனையில் என் கணவரை சேர்த்தபோது முருகானந்தம் என் கணவருடன் இல்லை. முருகானந்தத்தை 2 நாட்கள் கழித்து பார்த்தேன். 8 ம் தேதி பார்த்தீர்களா என்றால் ஆமாம். முருகானந்தத்திற்கு வயது சரியாக தெரியாது. சுமாராக 60 இருக்கலாம். அவர் பாரதிபுரத்தில் தான் வசித்து வருகிறார். என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய கணவர் கடத்தப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் முருகானந்தம் என் கணவருடன் இருந்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான். முருகானந்தம் ஆரோக்கியமான நிலையில் உள்ளார் என்றால் சரிதான்.

15. என்னுடைய கணவர் கடத்தப்பட்டதாக கூறி முருகானந்தம் காவல் நிலையத்தில் புகார் ஏதாவது அளித்துள்ளாரா என்றால் அளிக்கவில்லை. தொலைபேசி எண்.100-ற்கு ஏன் தகவல் கொடுக்கவில்லை என்று கேட்டீர்களா என்றால் அவர் பதட்டத்தில் என்ன செயவது என்று தெரியவில்லை என்று கூறினார். மேற்படி விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறவில்லை.

16. முருகானந்தம் மற்றும் சம்பவ இடத்தின் அருகில் இருந்தவர்கள் போலீசாருக்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் என் கணவரை எதிரிகள் கத்தியை காண்பித்து பொது இடத்தில் வைத்து கடத்தியிருந்தால் என் கணவருடன் இருந்த முருகானந்தம் அல்லது அருகில் இருந்த பொதுமக்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். உண்மையில் வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் அரசியல் மற்றும் ஜாதி வாரியாக ஆதாயம் தேடுவதற்காக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

17. 5 ம் எதிரி தாமரைகண்ணன் சம்பவ தினமான 5 ம் தேதியன்று அவர் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் ஊர்காவல் படையில் பணியில் இருந்ததற்கு ஆதாரம்

உள்ளது என்றால் சரியல்ல. 7 ம் தேதியன்று காலை வேளையில் புகார் அளித்தேன். காலை 7.30 லிருந்து 8 மணியளவில் புகார் அளித்திருப்பேன். நேரம் சரியாக ஞாபகம் இல்லை. என்னுடைய புகாரில் நான் அரசு மருத்துவமனைக்கு 8 மணிக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளேன்.

18. என் கணவர் மருத்துவமனைக்கு சென்று கொண்டிருக்கும்போதே என்னை தொலைபேசியில் அழைத்தார். புகாரில் என் கணவரின் நண்பர் அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த பின்னர் என்னை தொலைபேசியில் அழைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் வீட்டிற்கு வரவில்லை என்று நான் அவரை பலமுறை தொலைபேசியில் அழைத்து கொண்டிருந்தேன். ஆனால் அவர் என்னுடைய அழைப்பை ஏற்கவில்லை. அவருடைய நண்பர் சதீஸ் தான் என்னிடம் தொலைபேசியில் பேசினார். அவரும் சம்பவம் குறித்து எனக்கு தெரிவிக்கவில்லை. சிகிச்சைக்கு சேர்ந்த பின்னர் தான் சம்பவம் குறித்து எனக்கு தெரிவித்தார்கள்.

19. என்னுடைய கணவரை இரவு 8.30 மணியளவில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நானும் என்னுடைய கணவரும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. முருகானந்தம் மற்றும் சதீஸ்குமார் ஆகியோர் எங்களுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. புகாரினை நான் தான் எழுதினேன். வாசகங்களை நானாக தான் எழுதினேன். யார் கூறியும் எழுதவில்லை என்றால் சரிதான்.

20. என்னுடைய கணவரை போலீசார் ஒரே ஒரு முறை தான் விசாரித்தார்கள். என்னுடைய கணவரை கடத்த பயன்படுத்திய வாகனத்தை என் கணவர் போலீசாரிடம் அடையாளம் காண்பித்தாரா என்றால் ஆமாம். ஒரு முறை அடையாளம் காண்பித்தார். தேதி ஞாபகம் இல்லை. சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்த பின்னர் பாப்பம்பட்டி பிரிவில் வைத்து வண்டியை அடையாளம் பார்த்து 100 க்கு தொலைபேசியின் வாயிலாக தெரிவித்ததன் பெயரில் வாகனத்தை அதன் பின்ப பிடித்தார்கள். 1 மாதத்திற்கு பின்னர் மேற்படி வாகனத்தை பார்த்தார். வாகனத்தை யார் முன்னிலையில் அடையாளம் காண்பித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

21. சிகிச்சைக்கு பின்னர் என்னுடைய கணவர் குணமடைந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய புகாரும் என்னுடைய சாட்சியமும் முன்னுக்குபின் முரணாக உள்ளது என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் எனவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2023.04.12 18:46:20 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**